RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1912

# திருமந்திரம் காட்டும் வாழ்வியல் அறங்கள்

**மு. ஷோபனா [அ, *]**

[அ] தமிழ்த்துறை, கே.எஸ்.ரங்கசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), திருச்செங்கோடு-637215, தமிழ்நாடு, இந்தியா

# Virtues for Life in Thirumantiram

**M. Shobana [a, *]**

[a] Department of Tamil, K.S. Rangasamy College of Arts and Science (Autonomous), Tiruchengode-637215, Tamil Nadu, India

* Corresponding Author: shobanashanthi1986@gmail.com

Received: 28.08.2022
Revised: 07-10-2022
Accepted: 19-10-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

The literature about Saivism, who worship lord Shiva as the supreme deity, is Saivism literature. Saivism literature was composed to sing the praises of Shiva, to spread to Saivism and it records the norms of Saivism. From 7th to 12th century several works such as Sitrilakyam, Perungappiyam and Saiva Panuvals in Saiva literatures were composed. Man, who first worshipped nature started worshipping various gods according to his wish. They worshipped deities in two levels as minor and major deity. Of these the major deities are Shiva as Saivite God and Thirumal as Vaishnava God. India has developed under such metamorphoses. This article analyzes and explains the virtous for life as stated in the book Thirumantram written by Seikkilar, which is the 10th of the total twelve Thirumarai.

**Keywords:** Thirumantram, Shiva, Deities, Shaivism literature

## முன்னுரை

வாழ்வியல் அறம், பொருள், இன்பத்தை முப்பாலாக வாழ்வுக்குக் தந்தவர் (Puliyur Kesigen, 2015). அறம், பொருள், இன்பம், வீடு என நான்கினையும் வாழ்வுக்கு வளமாகத் தந்தவர். இன்றைய நிகழ்வுகளை காணும் போது அன்றே தீர்க்கதரிசியாய் எதை வாழ்வில் செய்ய வேண்டும், எதை செய்யக்கூடாது எனத் தெளிவுபடுத்தியவர் (Varatharajan, 2014).

திருமந்திரம் ஆகமத்தின் சாரமாக அமைந்திருந்தாலும் அனைவரும் அறியக்கூடிய எளிமையும், இனிமையும் உடைய பாடல்களை தன்னகத்தே கொண்டுள்ளது. ‘அன்பே சிவம்’ என்ற தொடரைப் பலரும் அறிவோம். மனிதர்கள் ஏனைய மனிதர்கள்பால் செலுத்தும் அன்பில்தான் உலகம் வாழ்ந்து கொண்டிருக்கிறது. உலகத்தில் தோன்றிய கடவுள் சார்புடைய மதங்களும், கடவுள் மறுப்புச் சமயங்களும் கூட அன்பினைப் பெரிதும் போற்றியே உரைக்கின்றன. இதைதான் நீங்கள் பிறர் மீது அன்பு செலுத்தினால் இறைவன் உங்கள் மேல் அன்பு செலுத்துவார் என்று திருமூலரும் வலியுறுத்தியுள்ளார்.

“அன்பும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார்
அன்பே சிவம் ஆவது ஆரும் அறிகிலார்” (Varatharajan, 2014).

## இல்வாழ்க்கை

வாழ்வியலில் முக்கியபங்கு வகிப்பது இல்வாழ்க்கை. மனையுள் இருந்தவர் மாதவர் ஒப்பர். முரண்பாடான எண்ணத்தை விட்டு, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் வாழ்ந்தால் மழை கண்ட வேர், துளிர் விடுவது போல வாழ்வு செழிக்கும். பூவும் மணமும், கரும்பும் இனிப்பும், பாலும் நெய்யும், காற்றும் அசைவும் போல் இல்லற வாழ்க்கை இருக்க வேண்டும் என்று மந்திரம் தெளிவாக கூறுகிறது.

## பொறுமையின் அவசியம்

வாழ்வியலுக்கு வேண்டிய அடிப்படை அணிகலன் பொறுமை என்று மந்திரம் வலியுறுத்துகிறது. இன்பமும் துன்பமும்நல் வினைக்கு பயன் இன்பம். தீ வினைக்கு பயன் துன்பம். இந்த வினைப்பயனே ஊழ் அல்லது விதி எனப்படும். ஊழ் ஆக்கம் தரும் ஊழ், கேடு தரும் ஊழ் என இரு வகையாக பிரிக்கப்படுகிறது.

## ஊழ்வினை

ஊழ் எனும் விதியே ஒருவனுக்கு செல்வம் பெற முயற்சியும் கொடுக்கும். செல்வத்தை இழப்பதற்கு வழியும் காட்டும். இப்பிறவியில் பெறும் இன்ப, துன்பத்திற்கு ஊழே காரணம். “ஊழின் பெருவலியாவுள” என்று குறளும் (Puliyur Kesigen, 2015), “முன்னை அறிவினில் செய்த முதுதவம் பின்னை அறிவினைப் பெற்றால் அறியலாம்” என்று மந்திரமும் கூறுகிறது (Varatharajan, 2014).

ஊழை மட்டுமே நம்பாது, சிந்தனையைச் சீராக்கி, வாழ்வின் நம்பிக்கையை வலிமையாக்கி, முயற்சியும் எடுக்க வேண்டும் என்று மந்திரம் கூறுகிறது. மரபணு சோதனையில் இருந்து மனிதனின் ஆயுளை எவ்வாறு கணக்கிடுவது வரை அரிய பல மருத்துவ குறிப்புகளை தன்னுள்ளே அடக்கியுள்ளது மந்திரம்.

எந்தவிதமான மருத்துவக் கருவிகளும் இன்றி நாளமில்லா சுரப்பிகளை ஆதாரங்களாக கூறி அவை உடலில் இருக்குமிடத்தையும், அதன் தன்மையையும் செயலையும் திறம்பட கூறுகிறது. குழந்தை உருவாகும் விதத்தையும், எக்காலத்தில் கருத்தறித்தால் நன்று என்பதையும் பிறக்கும் குழந்தை ஆணா, பெண்ணா என கண்டறியும் முறையையும், சில குழந்தைகள் குறைபாட்டோடு பிறப்பதற்கு என்ன காரணம் என்பதையும் கரு உற்பத்தி மந்திரத்தில் தெளிவாக விளக்கியுள்ளார்.

## நிலையாமை

திருமந்திரத்தில் யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை, உயிர் நிலையாமை என நிலையாமைத் தத்துவத்தைப் பற்றியும் திருமூலர் கூறியுள்ளார். ‘யாக்கை’ என்பதற்கு கட்டப்பட்டது என்பது பொருள். ஏழு தாதுக்களால் கட்டப்பட்ட இவ்வுடம்பு நான் எங்கு இருந்து வந்தேன்? எங்கும் போவேன்? நான் யார்? என்ற வினாவிற்கு விடையளிக்கும் விதமாகக் கூறியுள்ளார் திருமூலர். ‘பசு, பதி, பாசம்’ என்கிறார். உயிர் இல்லா உடல் நிலைத்து நிற்காது. இந்த உடம்பானது அழியும் தன்மை வாய்ந்தது, இளமையும் எப்போதும் நிலைத்து நிற்காது, செல்வமும் அவ்வாறே. இன்று ஒருவரிடம் இருந்தால் நாளை வேறொருவரிடம் இருக்கும். செல்வமானது சகடகால் போல மாறி மாறி பயணம் செய்யும் என்றும் இவையே எல்லாமே நிலைப்புத்தன்மையற்றது என்று திருமூலர் கூறுகிறார். எனவே மக்களானவர்கள் மீண்டும் மீண்டும் பிறப்பு என்ற துன்பத்தில் உழலாமல் இருக்க இறைவனை வழிப்பட்டு அறவழியில் செல்ல வேண்டும் என்பதே அவரின் கூற்றாகும்.

“ஊரெலாங் கூடி ஒலிக்க அழுதிட்டுப்

பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்

சூரையங் காட்டிடைக் கொண்டு போய்ச் சுட்டிட்டு

நீரினில் மூழ்கி நினைப் பொழிந்தார்களே”

என திருமூலர் உடல், உயிர், இளமை, செல்வம் எல்லாம் ஒரு மனிதனுக்கு நிலைப்புத் தன்மையற்றது என்று கூறுகிறார் (Varatharajan, 2014).

## பஞ்சமாபாதங்கள்

திருக்குறள், நாலடியார், பழமொழி நானூறு, திருமந்திரம் போன்ற அற இலக்கிய நூல்களிலும் பஞ்சமாபாதங்களைப் பற்றி கூறப்பட்டுள்ளது. ஒரு மனிதன் செய்யத்தகாத இழிவான செயல்களைத் தான் பஞ்சமா பாதங்கள் என்று கூறுகிறார்.

“கொலையே களவுகட் காமம் பொய்கூறல்

மலையான பாதக மாம் அவைநீக்கித்

தலையாஞ் சிவனடி சார்ந்தின் பஞ்சார்ந் தோர்க்

கிலையாம் இவைஞானா னந்தத் திருத்தலே”

கொலை, களவு, கள், காமம், பொய்கூறல் ஆகிய ஐந்தும் மாபெரும் பாதகங்களாகும் (Varatharajan, 2014). அப்பாதகச் செயலை செய்வதைத் தவிர்த்துத் தலையின் மேல் இறைவன் திருவடிகளைச் சூடி எல்லாம் வல்ல இறைவனின் இன்பத்தைப் பெற்று இப்பாவக் காரிங்களால் வரும் துன்பங்களில் இருந்து விடுபட்டுப் பேரின்பம் அடைய வேண்டும் என்பதே மூலரின் கருத்தாகும்.

## பிறன்மனை நயவாமை

“மனைபுகு வார்கள் மனைவியை நாடில்

சுனைபுகு நீர்போற் சுழித்துடன் வாங்கும்

கனவது போலக் கசிந்தெழும் இன்பம்

நனவது போலவும் நாடவொண் ணாதே”

என்ற பாடல் வரியில் பிறன் மனைவியை விரும்பாமையை அழகான எடுத்துக்காட்டுடன் விளக்குகிறார் (Varatharajan, 2014). சுனைநீரில் புகுந்து நீராட விரும்புவோருக்கு அதனால் வரும் இன்பம் கனவு போல கழியும் என்றும் நீர்சுழிகள் அவரைத் தப்பாமல் இழுத்துக் கொள்ளும். சுழியில் அகப்பட்டவர் அதிலிருந்து வெளியேறுவது அரிதாகும். அதுபோல் பிறர்மனையை விரும்புவோரும் காமச்சுழியில் சிக்கிக் கொள்வர் என்றும் இவ்வாறு ஒருவன் தன் வாழ்க்கையில் சேர்ந்த அனைத்து செல்வங்களையும் இழந்து வறுமை நிலையை அடைவான் என்று கூறுகிறார்.

“ஆத்த மனையாள் அகத்தில் இருக்கவே

காத்த மனையாளைக் காமுறுங் காளையர்

காய்ச்ச பலவின் கனியுண்ண மாட்டாமல்

ஈச்சம் பழத்துக் கிடருற்ற வாறே”

என்ற பாடல் வரியில் அன்புக்குரிய மனைவி வீட்டில் இருக்க பிறருடைய மனைவியை விரும்புகின்ற காமுகர்கள் செயல் காய்த்த பலாவின் கனியையுண்ணாமல் ஈச்சம் பழமுண்ணங்கருதி இடர்ப்பட்ட மூடர்களின் செயல்களாகும் என்கிறார் திருமூலர். எடுத்துக்காட்டாக சிலப்பதிகாரத்தில் கோவலன் கண்ணகியை விட்டுவிட்டு மாதவியிடம் சென்று அனைத்துச் செல்வங்களை இழந்தான் என்பதை அனைவரும் அறிந்த செய்தியாகும் (Varatharajan, 2014).

## கள்ளுண்ணாமை

மனிதர் கள்ளுண்ணுதல் மிகப்பெரிய பாவச்செயல் என்பதை திருமூலர் வலியுறுத்துகிறார்.

“மயங்குத் தியங்குங் கள்வாய்மை அழிக்கும்

இயங்கும் மடவார்தம் இன்பமே எய்தி

முயங்கும் நயங்கொண்ட ஞானத்து முந்தார்

இயங்கும் இடையறா ஆனந்தம் எய்துமே”

என்ற பாடல் வரியில் ஒருவன் உண்ணுங் கள் தன்னையும் தன் மூளையை மயங்கச் செய்யும் பெண்ணின்பத்தை நாடிச் செல்வர் (Varatharajan, 2014). தெளிவான ஞானத்தையும் அறிவையும் பெற இயலாது என்று பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கள்ளுண்டால் ஏற்படும் விளைவுகளை திருமூலர் அழகாக விளக்கி எடுத்துரைக்கின்றார். இவ்வாறு பஞ்சமா பாதகச் செயல்களான கள், காமம், பிறன்மனை நயவாமை போன்ற செயல்களைச் செய்யும் போது ஒருவனுக்குப் பொய் கூறுதலும், கொலை செய்யும் எண்ணமும், களவு செய்கின்ற எண்ணமும் கூடவே வரும் என்றும் இவற்றில் இருந்து விடுபட மக்கள் கல்வியறிவு என்ற ஞானத்தைப் பெற்று இறைவன் காட்டிய அறவழியில் செல்ல வேண்டும் என்று கூறுகிறார் திருமூலர்.

## அறவழிச்செயல்

அறம் என்ற சொல் பரந்து விரிந்த பொருளையுடையது. திருக்குறளில் அறத்துப்பால் என்ற தனி அதிகாரமே உள்ளது.

“காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்

அன்ன நீரார்க்கே உள”

என்ற வள்ளுவரின் வரிக்கேற்ப திருமூலரின் பாடல் வரியும் ஒத்துப்போகும் (Puliyur Kesigen, 2015).

“ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்

பார்த்திருந்து துண்மின் பழம்பொருள் போற்றன்பின்

வேட்கை யுடையீர் விரைந்தொல்லை உண்ணன்மின்

காக்கை கரைந்துண்ணுங் காலம் அறிமினே”

என்ற பாடல் வரியில் காக்கையானது உணவைக் கண்ட போது மறைத்து வைக்காமல் அனைத்து காகங்களையும் அழைத்துப் பகுத்துண்ணும் பழக்கமும் வழக்கமும் கொண்டது. இதனால் மனித தர்மமானது செல்வம் பெருகியவன், செல்வத்தின் பயன் அடுத்தவர்க்குப் பகிர்ந்து அளித்தலேயாகும் என்றும் அதுவே அறவழிச்செயலாகும் என்று மூலரும், வள்ளுவரும் காக்கையின் செயலை எடுத்துக்காட்டாக மனிதருக்குக் கூறுகின்றார் (Varatharajan, 2014).

“எல்லா உயிர்களையும் நேசி

யாவர்க்குமாம் இறைவற்கு ஒரு பச்சிலை

யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை

யாவர்க்குமாம் உண்ணும் போதுஒரு கைப்பிடி

யாவர்க்குமாம் பிறர்க்கு இன்உரை தானே”

எல்லா உயிர்களையும் நேசிக்க வேண்டும். பசுவுக்குப் புல் தருவது, ஏழைக்கு ஒரு கவளம் உணவு தருவது, துன்பத்தில் உள்ளவருக்கு ஆறுதல் சொல்வது, பெற்றோரைக் காப்பது, மற்றவருக்கு

உதவுவது ஆகியன தர்மங்கள் என்கிறது திருமந்திரம். எனவே நாம் திருமந்திரம் காட்டும் வழிப்படி தர்மங்கள் செய்வோம் பொல்லாப் பிணியும், சொல்லொணா துயரங்களும் இல்லாத வாழ்வைப் பெற்று மகிழ்வோம் (Varatharajan, 2014).

“ஆற்றரு நோய்மிக்கு, அவனிமழை இன்றிப்

போற்ற அருமன்னரும் போர்வலி குன்றுவர்

கூற்று உதைத்தான் திருக்கோயில்கள் எல்லாம்

சாற்றிய பூசைகள் தப்பிடில்தானே”

சிவாலயங்களில் பூசைகள் குறைந்தால் நோய் மிகும், மழை குறையும், மன்னர் கெடுவர் என்கிறார் (Varatharajan, 2014). திருக்கோயிலை முன்னோர்கள் பக்தியுடன் கட்டினர். அதற்கு பலகோடி சொத்துக்களையும் தந்தனர். ஆனால் அந்தச் சொத்துகளை இன்றைய மக்கள் அபகரித்து வாழ்கிறார்கள். கோயில்களை வியாபார நோக்கில் செயல்படும் மையங்களாக மாற்றி வருகிறார்கள். அதனால்தான் வளம் குன்றி மழையை இழந்தோம் துயரங்களை அனுபவிக்கிறோம்.

அதேபோல மனிதன் இயற்கையை கடவுளாக வணங்கியவரை அதுவும் இயல்பாக உதவியது. இன்று இயற்கையை அழித்து, மாசுபடுத்துவதால் இயற்கை பேரிடர்கள் உருவாகின்றன. எனவே ஆலய பூசைகளை முறைப்படி செய்வோம் மழை பெறுவோம்!

## கல்வியின் அவசியம்

‘கல்வி’ என்பது அறிவு, நல்லொழுக்கம், நுட்பத் தகைமை என்பவனவற்றைக் கற்றலையும், கற்பித்தலையும் குறிக்கும். கல்வி மனிதருக்கு பரந்துபட்ட அறிவை வழங்கிச் சிந்தனையைத் தூண்டும் கல்விச்செல்வம் ஒன்று மட்டுமே நிலையான புகழினைத் தரும். பண்டைய காலத்தில் கல்வி என்பது சமயச் சார்பாக இருந்தது. சுமயத்தினைத் தழுவிய அக்காலக் கல்வி வளர்க்கப்பட்டது. கல்வி கற்றலைத் திருமூலர் சமயத்துடன் இணைத்துக் கண்டுள்ளார். கல்வி என்பது தத்துவத்தைப் புரிந்து கொள்ளுதல் என்ற நிலையில் இருந்தது. ‘தத்துவம் புரிதல்’ என்ற இந்த நிலையில் ‘சில அனுபவத்தினை பெறுவதே கல்வி’ என்ற கருத்தினை உடையவராகத் திருமூலர் உள்ளார்.

## திருமந்திரத்தில் கல்விச் சிந்தனைகள்

இறைவன் உயிர்களின் வினைக்கேற்பப் பிறப்பிக்கின்றான். அவ்வாறு பிறந்த உயிர்தன் அருளை நாடி உய்ய நினைக்கின்றது. எனவே உயிர்களின் உள்ளத்துள் நிலைத்து நிற்கும் கல்வியே உண்மையான கல்வி என்பதனை,

“குறிப்பறிந் தேன் உடலோடுயிர் கூடிச்

செறிப்பறிந் தேன்மிகு தேவர் பிரானை

மறிப்பறி யாதுவந் துள்ளம் புகுந்தான்

கறிப்பறி யாமிகுங் கல்வி கற்றேனே”

என்னும் பாடல் அடிகள் விளக்குகின்றன (Jayam Kannan, 2008). இப்பாடலில் மாசில்லாத உயர்ந்த கல்வியை யான் கற்றேன். அதனால் உயிர் உடலோடு கூடி நின்று அறியத்தக்கப் பொருளை அறிந்தேன். அதன் பயனாக இறைவனை உள்ளத்திலே வைத்து வணங்கினேன். அதனால் மீண்டு போகாதவனாய் என் உள்ளத்திலே புகுந்து நின்றான் என்று திருமூலர் பதிவு செய்துள்ளார்.

நிலையான செல்வம் ஞானம். அதனை பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். பொருட் செல்வத்தினைத் தேடித் தருகின்ற கல்வியைக் கற்க வேண்டும். அச்செல்வத்தினைப் பெற்ற பின் மேலும் கற்க வேண்டும் என்னும் ஆர்வத்தினை ஏற்படுத்தாது. உடலுக்கும் உயிருக்கும் மேன்மை

தருகின்ற கல்வி ஊனில் கலந்து உயிரில் கலக்கும் கல்வி எல்லா காலத்திற்கும் பயன்படும் என்பதை வள்ளுவர்,

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு

எழுமையும் ஏமாப்பு உடைத்து"

என்று குறிப்பிட்டுள்ளார் (Puliyur Kesigen, 2015). உயிர்களுக்குக் கண் இன்றியமையாதது. உயிரின் ஒளி கண் வழியே உலாவி உலக வாழ்வினை நடத்தி உயிரை விட உயர்வாக எண்ணி எல்லா வழியும் எல்லோருக்கும் உரியவை என்று புகழ்ந்து போற்றி வருகின்றனர். இது புறக்கண்ணால் மானிடர் அடையும் சிறப்பாகும். அக்கண் பெறும்போது புறக்கண் மேன்மேலும் ஒளி பெறுகின்றது. அக்கண்ணை அளிப்பது கல்வியாகும். இதனைத் திருமந்திரம்,

"கற்றறி வாளர் கருதிய காலத்துக்

கற்றறி வாளர் கருத்திலோர் கண்ணுண்டு

கற்றறி வாளர் கருதி உரைசெய்யுங்

கற்றறி காட்டக் கயலுள வாக்குமே"

எனும் பாடல் அடிகள் விளக்குகின்றன (Varatharajan, 2014). இப்பாடலில் கல்வியைக் கற்ற சான்றோர்கள் எல்லோருக்கும் நற்பண்புகளைப் புகட்டி நல்வழிப் படுத்துவார்கள். நல்லோரின் அறிவுரைகள் பாலை நிலத்திலே கயல் மீனைப் பிறழச் செய்தாற் போல நன்மையை பயக்கும் என்கிறார் திருமூலர். மேலும் தமது அகக்கண்களால் கல்வியைக் கண்டு அதன் மேன்மை இவ்வுலகிற்கு இஃதென எடுத்துரைத்துள்ளார்.

## கல்லாமையால் ஏற்படும் துன்பங்கள்

கல்வி கேள்வி வாயிலாக அறிந்தும் எண்மை அனுபவம் பெறாதவர் கல்லாதவர் எனும் கருத்திற்கேற்ப திருமூலர் அனைத்து உயிரினும் அனைத்து இடத்திலும் உள்ளான் எனினும் கல்லாதவர் அவனைக் காணஇயலாது என்பதை உணர்ந்து கல்லாதவர்களை கயவர், மூடர், மதியிலார் என்று சுட்டியுள்ளார் (Anasuya, 2018).

கல்லாமையை இல்லாமல் ஆக்கினால் மனித குலம் மேன்மையுறும். திருமூலர் சிவ அனுபவத்தைக் கற்காமல் இருப்பதையே கல்லாமை என்கிறார். சிவஞானக் கல்வி இல்லாதவர்கள் மனத்தினைச் சிதறவிட்டு அழிவைத் தேடிக்கொள்வார்கள். திருமூலர் சிவனின் திருவைந்தெழுத்தையும் திருமுறைகளையும் கற்காதவர்களே கல்லாதவர்கள் என்றாலும் கல்வியறிவு பெறாதாருக்குரிய வாழ்வியல் இன்னல்களையும் சுட்டுகிறார்.

இறைவன் வேறுபாடு இல்லாதவர் கற்றவர்கள். சிவனை அறிவால் உணர்ந்து மகிழ்வார்கள். கல்லாதவர்கள் உலகியலறிவு பெற்றிருப்பினும் அறிவால் உணர்ந்து மகிழும் திருவடி இன்பம் பெற இயலாது. இதனை,

"கல்லா தவரும் கருத்தறி காட்சியை

வல்லார் எனில் அருட்கண்ணான் மதித்துளோர்

கல்லாதவார் உண்மைபற் றாநிற்ப கற்றோரும்

கல்லாதார் இன்பம் காணுகிலாரே"

என்ற பாடல் விளக்குகின்றன (Varatharajan, 2014). கல்லாதவர்கள் உயிரே நிலையானது என்று கருதுவர். இவர்கள் இறைவனை வணங்கும் முறையை அறியாதவர்கள். கற்றவர்கள் சிவஞானம் பெற்று உயிர் நிலையானது அல்ல என்பதை உணர்ந்து அறமும் தவமும் செய்து முக்தியடைகின்றனர். கல்லாதவர்கள் வினை காரணமாகப் பிறவி துன்பத்தில் வருந்துகின்றனர்.

"கல்லாத மூடரைக் காணவும் ஆகாது

கல்லாத மூடர்சொல் கேட்கக் கடன்அன்று

கல்லாத மூடர்க்குக் கல்லாதவர் நல்லவராம்

கல்லாத மூடர் கருத்தறியாரே"

எனும் பாடல் அடிகள் விளக்குகின்றன (Varatharajan, 2014).

சமுதாயம் உயர்ந்தோரைப் பின்பற்றி வந்துள்ளது. பண்டைக்காலத்தில் கல்வி என்பது சமயச் சார்புடையதாக விளங்கி வந்தது. திருமூலர் உயிர்களின் உள்ளத்தில் நிலைத்து நிற்கும் கல்வியே சிறந்தது என்று உரைத்துள்ளார். உண்மையான ஞானம் என்பது கல்வியோடு கூடிய வேள்வி ஞானமாகும். கேள்வி ஞானத்தால் இறைவனை உணர்ந்தவர்கள் தேவர்களுக்கு சமமாகக் கருதப்படுவர். சிவானுபவத்தின் கிட்டும் கல்வி உயிருக்கு வழியும் உறுதியும் அறிவுக்கு உரமும் உண்டாக்க வல்லது. கல்வி கற்றவரின் உள்ளம் கடவுள் உறையும் இல்லமாகத் திகழும் தன்மையைப் பதிவிட்டுள்ளார்.

## முடிவுரை

சைவம் சமயத்தை வளர்த்ததோடு மக்களின் ஒழுக்கத்திற்கும், நல்ல மனிதர்களாக வாழ்வதற்குத் தேவையான கருத்துக்களையும் முன் வைக்கின்றது. அதற்குச் சான்றாக திருமூலர் இயற்றிய திருமந்திரம் திகழ்கின்றது. அறத்தின் வழியில் வாழ்வதன் மூலம் இறைவனின் பாதத்தை அடைய முடியும் என்ற கருத்தை வலியுறுத்துகின்றார் திருமூலர். சமுதாயம் உயர்ந்தோரைப் பின்பற்றி வந்துள்ளது. பண்டைக்காலத்தில் கல்வி என்பது சமயச் சார்புடையதாக விளங்கி வந்தது. திருமூலர் உயிர்களின் உள்ளத்தில் நிலைத்து நிற்கும் கல்வியே சிறந்தது என்று உரைத்துள்ளார். கல்வி கற்றவரின் உள்ளம் கடவுள் உறையும் இல்லமாகத் திகழும் தன்மையைப் பதிவிட்டுள்ளார். இவ்வாறு வாழ்வியல் அறங்களை ஆராய்து விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

## References

Anasuya, P. (2018) Thirumanthirathil Kalvi Sindhanaikal, Tamilaivu Sangamam Pannattu Aaivithal, 63-65.

Jayam Kannan, (2008) Thirumanthirathil Maruththuvam, Lottus Graphics, Chennai, India.

Puliyur Kesigen, (2015) Thirukural, Dharanis Pathippagam, Chennai, India.

Varatharajan, G. (2014) Thirumanthiram, Palaniyappa Brothers, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License